# மெட்ரோ ரயில் பயண அட்டைகளின் செல்லுபடியாகும் காலம் நீட்டிப்பு

சென்னை, ஜூன் 28: கரோனா பொதுமுடக்க காலத்தில் பயன்படுத்தப்படாத சென்னை மெட்ரோ ரயில் பயண அட்டைகளின் செல்லுபடியாகும் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது: சென்னை மெட்ரோ ரயில் பயண அட்டை உபயோகிக்கும் பயணிகளுக்காக, கரோனா பொதுமுடக்க காலத்தில் (மே 10 முதல் ஜூன் 20 வரை) பயணிகள் பயன்படுத்தாத பயண அட்டைகளில் உள்ள பயண எண்ணிக்கையை அதற்குச் சமமாக செல்லுபடியாகும் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, பயணிகள் தங்கள் பயண அட்டையில் உள்ள பயண எண்ணிகையின் அளவை நீட்டித்துக் கொள்ள அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் உள்ள வாடிக்கையாளர் சேவையை அணுக வேண்டும்.

கரோனா பொதுமுடக்க காலத்தில் க்யூ ஆர் குறியீடு பயணச்சீட்டு மூலமாக, பயணம் செய்யும் பயணிகளின் பயண எண்ணிக்கை செல்லுபடியாகும் கால அளவும் செவ்வாய்க்கிழமை (ஜூன் 29) முதல் நீட்டிக்கப்படுகிறது. மெட்ரோ ரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகளின் வருகை, வெளியேறுதல் மற்றும் தனிமனித இடைவெளியைக் கண்காணிப்பதற்காக தேவையான ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அனைத்து மெட்ரோ ரயில்கள் மற்றும் மெட்ரோ ரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகள் பயன்படுத்தும் மற்றும் காத்திருக்கும் இடங்களில் தனிமனித இடைவெளி குறித்த 'எக்ஸ்' குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளன. பயணிகள் அனைவரும் இந்தக் குறியீடுகளை பின்பற்றவேண்டும். முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசத்தை சரியாக அணியவில்லை என்றாலோ உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படுகிறது. இதை கண்காணிக்க குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.